இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 02 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 26 – செவ்வாய்க்கிழமை 11 ஆகஸ்ட் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 02 : Thiruvalluvar Year - 2057 - Aadi 26 - Tuesday 11 August 2026 - Chennai 12 Pages ₹ 5.00


## முத்தமிழறிஞர் கலைஞர் உதிரம் சிந்தி வளர்த்த மூத்த பிள்ளை!

## அறிவாலயத்தின் அறிவாயுதமாகத் திகழும்

# ‘முரசொலி’யின் பயணம் நூறாண்டுகள் கடந்தும் தொடர்க!

## 85-ஆவது பிறந்தநாளையொட்டி

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஆக. 11 -**

**‘முரசொலி’ 85-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், “அறிவாலயத்தின் அறிவாயுதமாகத் திகழும் ‘முரசொலி’யின் பயணம் நூறாண்டுகள் கடந்தும் தொடர்க” என்று வாழ்த்திப் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து நேற்று (10.08.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள செய்தி வருமாறு :-

**“கழக உடன்பிறப்புகளின் இதயத்துடிப்பு - தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றின் நாட்குறிப்பு - முத்தமிழறிஞர் கலைஞர் உதிரம் சிந்தி வளர்த்த மூத்த பிள்ளை முரசொலி!**

**அதன் அலுவலகத்திற்குச் சென்று, என் மூத்த சகோதரனுக்கு 85ஆவது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தேன்!**

**தலைவர் கலைஞர், முரசொலி மாறன், முரசொலி செல்வம் என முரசொலியைத் தொடர்ந்து செழுமையாக வளர்த்தார்கள். நானும் முரசொலிக்காகப் பார்க்காத வேலையே இல்லை என்னும் அளவுக்கு, அனைத்து நிலைகளிலும் பணியாற்றி இருக்கிறேன்.**

**அறிவிப்புப் பலகைகளாக மட்டுமே இயங்கும் பல அரசியல் கட்சி இதழ்களுக்கு இடையே, கருத்தாழமிக்க கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், பொங்கல் மலர், பாசறைப் பக்கம் என அறிவாலயத்தின் அறிவாயுதமாகத் திகழும் முரசொலியின் பயணம் நூறாண்டுகள் கடந்தும் தொடர்க! அதன் பணிகளில் வெல்க!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




---

### தி.மு.கழகம் தொடர்ந்த

## காவிரி வழக்கு - ஆக.13-ல் விசாரணை!

### உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

*புதுடெல்லி, ஆக. 11 -*

காவிரிநீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்ட பிறகும் தண்ணீர் திறக்காத கர்நாடக அரசுக்கு எதிராக தி.மு.க. மற்றும் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு, வருகிற 13ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது.

உச்சநீதிமன்றம், காவிரி நீர் ஒழுங்குமுறை குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஆகியவை உத்தரவிட்டும் காவிரியில் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடாமல் கர்நாடகா தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

இந்நிலையில், பொறுப்புள்ள எதிர்க்கட்சியான தி.மு.க. உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்கு தொடர்ந்துள்ளது. தி.மு.க. விவசாய அணி செயலாளர் A.K.S.விஜயன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில், காவிரி நீரை உடனடியாக தமிழ்நாட்டிற்கு திறந்து விட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தி.மு.க. மனு தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாடு அரசும் காவிரியில் தண்ணீர் திறக்க உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்தது. இந்த நிலையில் காவிரி தொடர்பான மனுக்களை 13ஆம் தேதி விசாரணைக்கு எடுப்பதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு அறிவித்துள்ளது.

---

### வேளாண்மை பட்ஜெட்டில்

## எந்த மாற்றமும் இல்லை! ஏமாற்றமே மிஞ்சியது!

### பேரவையில் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விமர்சனம்!

**சென்னை, ஆக. 11 -**

**தேர்தல் வாக்குறுதியின்படி பயிர்க்கடனை முழுமையாக ரத்து செய்யவேண்டும் என்று சட்டப்பேரவையில் தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் வலியுறுத்தினார்.**

சட்டப்பேரவையில், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுபேசிய எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், வேளாண் பட்ஜெட்டில் மாற்றம் எதுவும் இல்லை ஏமாற்றமே மிஞ்சியுள்ளதாகத் தெரிவித்தார். த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் தினந்தோறும் போராடுகின்றனர் என்றும், கடந்த 5 ஆண்டுகாலம் தி.மு.க. ஆட்சியின்போது விவசாயிகள் போராட வேண்டிய நிலை ஏற்படவில்லை என்றும் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார். தேர்தல் வாக்குறுதியின்படி நெல் மற்றும் கரும்பு கொள்முதல் விலையை ஏன் உயர்த்தவில்லை? என்றும் த.வெ.க. அரசு, பயிர்க்கடனை ஏன் முழுமையாக தள்ளுபடி செய்யவில்லை? என்றும் கேள்வி எழுப்பினார்.



தி.மு.க. ஆட்சியில்தான் விவசாயிகளுக்கு 7 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், விவசாயிகளுக்கு வட்டியில்லா கடனை வழங்கியதாகவும் எம்.ஆ.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார். மேலும், விவசாயிகளுக்கு தி.மு.க. அரசு அள்ளிக் கொடுத்தது; த.வெ.க. அரசு கிள்ளிக் கொடுக்கிறது என்றும், தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகள் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து, தி.மு.க. ஆட்சியில் வேளாண்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது, த.வெ.க. ஆட்சியில் வேளாண்மை துறைக்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதாகவும் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கூறினார்.

தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு பெயரை மாற்றியதுதான் த.வெ.க. அரசின் மாற்றம் என்றும், விவசாயிகளுக்கான பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வலியுறுத்தினார்.

---

### மேற்கு வங்கத்தில்

## மம்தா பானர்ஜியின் கார் மீது கல்வீச்சு - பதற்றம்!

### தாக்குதல் சம்பவத்தால் அவசரமாக வெளியேறிய மம்தா!

*கொல்கத்தா, ஆக. 11 -*

மேற்கு வங்கத்தில் முன்னாள் முதலமைச்சர் மம்தா பானர்ஜியின் கார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்வருமான மம்தா பானர்ஜி, மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தைச் சேர்ந்த கட்சித் தொண்டர் ஒருவர் போலீஸ் காவலில் கொல்லப்பட்டதை அடுத்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க சென்றிருந்தார்.

அப்போது, அவரது காரை சூழ்ந்து கொண்ட ஒரு கூட்டம் அவருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியது. மம்தாவின் கார் மீது சிலர் கல்வீசி தாக்குதல் நடத்தியதால் பதற்றமான சூழல் உருவானது.

---

## பச்சை நிறமாக மாறிய மேட்டூர் அணையின் நீர்த்தேக்கம்!

### கர்நாடக ரசாயனக் கழிவுகளால் நோய் பரவும் அபாயம் - மக்கள் அச்சம்!

*மேட்டூர், ஆக. 11 -*

கர்நாடக ரசாயன கழிவுகளால், மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதி பச்சை நிறமாக மாறி காட்சி அளிக்கிறது. துர்நாற்றமும் வீசி வருவதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கோட்டையூர், பண்ணவாடி, சித்திரை பட்டி, பூச்சியூர், ஒட்டனூர், ஏமனூர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் காவிரி கரையோரத்தில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்க பகுதியாக உள்ளது. இப்பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் விவசாய மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக பண்ணவாடி முதல் கோட்டையூர் வரை தேங்கி நிற்கும் தண்ணீர் பச்சை நிறமாக மாறி உள்ளது. மேலும் துர்நாற்றம் வீசி வருவதால், பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

கர்நாடக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் ரசாயன கழிவுநீர் ஆற்றில் கலக்கப்படுவதால் மேட்டூர் அணையில் நீர் துர்நாற்றம் வீசி வருவதாகவும், தண்ணீரை குடிப்பதினால் உடல் உபாதைகள் மற்றும் தோல் நோய்கள் ஏற்படுவதாகவும் மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர்.